மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கிற அனுதாபத்தின் அடிப்படையிலே வருங்காலங்களில் இதுபற்றிய முயற்சிகளை எடுக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர்களுக்கு, இப்பொழுது மட்டும் அல்ல காங்கிரஸ் கட்சிக் காலத்திலிருந்தே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே அவர்களுக்கு கட்டுகிற கட்டிடங்கள் எல்லாம், கான்டிராக்ட் முறையில் விடப்படுவதால், அந்தக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை முழுமையான அளவில் பயன்பெறுவதில்லை என்பதோடு, கட்டிடங்கள் வெகு சீக்கிரத்திலேயே பழுது அடைந்துவிடுகின்றன. ஆகவே, கட்டிடம் சேதம் அடைவதற்குக் காரணம் குடியிருப்பவர்கள் அல்ல. அரசாங்கத்தின் பெயரால் கட்டப்படுவதால், இதை அரசு துரிதமாக பரிசீலனை செய்து, அரசு கட்டிடங்கள் குடியிருப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய முறையில், ரிப்பேர்கள் செய்து கொடுப்பதற்கு விரைவில் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வி பழங்குடி மக்கள் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதித் திராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட இலவச வீடுகளைப் பற்றி கேட்கிறார்கள். வீடுகளைக் கட்டித் தந்ததில் ஏதாவது குறை இருப்பின் அரசுக்குத் தெரிவித்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.
தொகுதிகள் குறித்து.

திரு அ. செல்வராசன்: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் அப் ஆர்டர், நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து நல்ல காரியங்களை இந்த நாட்டுக்குச் செய்ய முன் வரவேண்டும் என்று சொன்னார்கள். நல்ல வேண்டுகோள்தான்....(மணியடிக்கப்பெற்றது) என் தொகுதியைப் பொறுத்தவரையில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவைகள் எல்லாம் பாயின்ட் அப் ஆர்டரில் வராது. தொகுதியைப் பற்றி பாயின்ட் அப் ஆர்டரில் கேட்க முடியாது. திரு. இரெ. இராசமாணிக்கம்.

TRUTH ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 12]

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவது 15 ஆம் தேதி நிறுத்தப்படும் என்று சொன்னார்கள். அப்படி 15 ஆம் தேதி நிறுத்தினால் தஞ்சை மாவட்டத்தில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் தாளடி செய்யப்பட்டு பாழாகக் கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் தண்ணீர் கொடுப்பதை நீட்டித்து இன்னும் ஒரு 15 நாள்....... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவைகள் எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. தொகுதியைப் பற்றி இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் இருக்காது. உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்புகள்.

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் செலுத்தவேண்டிய தொகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, எம். சின்னசாமி, ஏ. சி. சண்முகம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர், அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, ''நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் செலுத்தப்பட வேண்டிய தொகை இன்னும் வழங்கப்படாததால் நெசவாளர்கள் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன். அதற்கு மேலும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். ''மலிவு விலை துணி மானியம் 1.29 கோடிக்கு கோ—ஆப்டெக்ஸ்நிறுவனத்திற்கு வழங்குகிற உத்தரவு 11-2-1982 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் 31-3-1982—க்குள் மத்திய அரசிடமிருந்து தள்ளுபடி மானியம் கொடுக்கப்பட்டு, 2.5 கோடி அளவில் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'',

அறிக்கை

தமிழ்நாட்டில் 1,251 நெசவாளர் கூட்டுறவச் சங்கங்கள் மொத்தம் 2.89 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன. அவற்றின் தலைமைச் சங்கமாகக் 'கோ—ஆப்டெக்ஸ்' எனப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவச் சங்கம் இயங்கி வருகிறது. இது, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக 50 சதவீதத்தை கொள்முதல் செய்து